# தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்



(மாநிலப் பல்கலைக்கழகம் சட்ட எண் 43/1997-ன் கீழ் தோற்றுவிக்கப்பட்டது)

"பூம்பொழில்", 5, டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை – 600 028

புதிய வளாகம்: எம்.ஜி.ஆர். சாலை, பெருங்குடி, சென்னை – 600 113

# THE TAMIL NADU DR. AMBEDKAR LAW UNIVERSITY

(A State University established by Act No. 43 of 1997)

# INFORMATION BULLETIN – 2021-2022

For Admission to 3 Year LL.B. Degree Course offered at the Affiliated Law Colleges in Tamil Nadu

பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்ற அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் பயிற்றுவிக்கப்படும் 3 **ஆண்டு எல்எல்.பி.** பட்டப்படிப்பு சேர்க்கை

## தகவல் தொகுப்பேடு – 2021-2022

---

No. 5, "Poompozhil", Dr. D.G.S. Dinakaran Salai
Raja Annamalaipuram, Chennai – 600 028, Tamil Nadu, India
Phone Nos.: +91-44-24641212 / 24641919 / 24957414
Website: www.tndalu.ac.in



## From the Vice-Chancellor's Desk

*"Education in its essence guides the mankind to develop values, and contribute with wisdom;*
*Legal Education as a branch of life sensitizes the responsibility to promote truth and justice"*

It is a matter of true privilege, rejoice and spirit for me to serve the Tamil Nadu Dr. Ambedkar Law University, as the Vice Chancellor and welcome all the new vibrant entrants to our academic family. As ever with the patriotic legacy of our Father of Nation Mahatma Gandhi and the Father of our Constitution Dr. B.R. Ambedkar and many more Patriots, legal education as a major pillar for service towards the nation and mankind and all life inspires the academic learning environment of our University. The Tamil Nadu Dr. Ambedkar Law University, Chennai is the premier Institution in the State of Tamil Nadu. Along with its Affiliated Governement Law Colleges, the University is in the path of serving the aspirations of thousands of young legal minds and future ambassadors to learn law with multi-disciplinary value and contribute immensely to create a harmonious society.

Legal Education today is not only sought for professional ambitions or to meet the technological developments but increasingly for legal aid, assisatance and service for the needy and poor. The Tamil Nadu Dr. Ambedkar Law University tirelessy promotes and develops noble cum resourceful education and human legal resource building to meet national and international demands.

The community of legal scholars in the Fourteen Affiliated Government Law Colleges consistently works towards maintaining the standards of legal education by inculcating qualities of life, ideals of social justice, professional legal skills based learning with research instinct and visions. The Faculties are actively engaged in introducing traditional cum innovative teaching methods and are actively involved in research through scholarly contributions. The philosophy of our legal pedagogy is fundamentally in lines with the life based learning skills of observation, enquiry, discussion, cause and effect, argument and dialogue, field based insights on societal problems and intellectual exchange of ideas promoting solutions. The core aim of our legal education is to strive towards training the Student fraternity to aquire the intellectual legal mind with human value based approaches.

At present all the Affiliated Government Law Colleges are staffed with the full sanctioned strength of Permanent Faculties. The Government of Tamil Nadu graciously provided a Grant of Rs. 816 Crores to the Directorate of Legal Studies to inaugurate new colleges for the welfare of the Students fraternity in the State of Tamil Nadu. Accordingly, the infrastructure of the newly constructed Affiliated Government Law Colleges at Pudupakkam, Pattari Perumbudur, Villupuram, Salem, Dharmapuri, Nammakal, Theni and Ramanathapuram are developed in line with state of the craft with international standards to facilitate effective dissemination and discussion of knowledge.

The Affiliated Government Law Colleges on their excellence and in collaboration with the Tamil Nadu Dr. Ambedkar Law University and other pioneering academic bodies of national and international repute are organising periodic international seminars, conference and workshops aimed at promoting critical socio-legal thinking to resolve societal concerns and improving the quality of the state of legal education and legal research methodology.

The virtue of working selflessly for the intellectual self respect and professional contributory life of each and every student is the central shining motivating factor for our Institutions.

I firmly believe with all the service and credentials Our University and the Affiliated Government Law Colleges are truly committed and dedicated to serve the requirements of all our partners of legal education, the students, parents and professional public and private legal institutions, above all the universal human family.

With the Blessings of Almighty, the warmth of our academic family, again I welcome the Students to be part of our family and continue to strive for acquiring value based intellectual legal excellence and selflessly serve all life.

Heartiest Wishes.

**Prof. (Dr.) N.S. Santhosh Kumar**
***Vice-Chancellor***



**Prof. (Dr) C.CHOCKALINGAM,**
Director of Legal Studies.

Directorate of Legal Studies,
Purasaiwalkam High Road,
Kilpauk, Chennai – 10.

**MESSAGE**

I am very happy to associate with Prof. (Dr) N.S. SANTHOSH KUMAR, Hon'ble Vice-Chancellor of the Tamil Nadu Dr. Ambedkar Law University in admitting students to various Government Law Colleges in Tamil Nadu for the academic year 2021-22. The functioning of Government Law Colleges with good infrastructure has proved to be very effective and systematic study oriented activities are going on with active participation of students and every College is competing with other Colleges to impart quality legal education in Tamil Nadu.

Students of Government Law Colleges are regularly attending Mock Trials, Moot Courts, Alternative Disputes Settlement Bodies, Advocates' Chambers, Court Proceedings including the Hon'ble High Court of Madras. Presentation of Assignments, participation in class discussions, preparing for periodical examinations and Viva-voce, regular attendance in classes make the students to face any challenge in the legal profession. Now, the students of Government Law Colleges are participating in International Moot Court Competitions being held in Vienna, Hong Kong and other countries, thanks to the involvement of students, efforts of teachers and the able administration of Principals.

The Government of Tamil Nadu is committed to enhance the quality of Legal Education and taking every effort for a bright future for the students of Government Law Colleges in Tamil Nadu. I wish all the budding law students to come out with flying colours and achieve greater heights in all their endeavours.

**'All the Best'**



# தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

[மாநிலப்பல்கலைக்கழகம் சட்ட எண் 43/1997-ன் கீழ் தோற்றுவிக்கப்பட்டது]
"பூம்பொழில்", எண்.5, டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை – 600 028.

## மாணவர்களுக்கான தகவல் மற்றும் வழிமுறைகள்

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக சட்டம், 1996-ன் கீழ்,1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 9-ஆம் நாள் அன்றைய மேதகு குடியரசுத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இப்பல்கலைக்கழகம் ஆசியக் கண்டத்திலேயே சட்டக் கல்வியினை சீரிய முறையில் பயிற்றுவித்திட தோற்றுவிக்கப்பட்ட முதல் ஒருங்கிணைவுப் பல்கலைக்கழகமாகும். ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பி.ஏ.எல்எல்.பி. (ஹானர்ஸ்), பி.காம்.எல்எல்.பி.(ஹானர்ஸ்), பி.பி.ஏ.எல்எல்.பி.(ஹானர்ஸ்), பி.சி.ஏ.எல்எல்.பி.(ஹானர்ஸ்), மற்றும் மூன்றாண்டு எல்எல்.பி.(ஹானர்ஸ்) பட்டப்படிப்புகளை பயிற்றுவித்து வரும் இப்பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளி குறுகிய காலத்திலேயே நாட்டிலுள்ள ஏனைய முன்மாதிரி சட்டப் பள்ளிகளுக்கு இணையான வளர்ச்சி பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்திலுள்ள முதுகலை சட்ட மேற்படிப்புத் துறைகளின் வாயிலாக CBCS-முறையில் **ஒன்பது** பிரிவுகளில் எல்எல்.எம். சட்ட நிறைஞர் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுவதோடு பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் அடையாறு ஆற்றின் கரையில் 'பூம்பொழில்' வளாகத்தில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகத்திற்கென ஒரு முழுமையான பல்கலைக்கழக புதிய வளாகத்தினை கட்டிட தமிழ்நாடு அரசு சென்னை பெருங்குடியில் 15 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து, ரூ.59.27/- கோடி நிதி வழங்கியதைக் கொண்டு, மிகப்பிரமாண்டமான நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் முறையே நிர்வாகக்கட்டடம், சட்டவியல் இளையர் படிப்பு மற்றும் சட்டவியல் நிறைஞர் படிப்பு கட்டடங்கள், நவீன நூலகம், விளையாட்டு அரங்க கட்டடத் தொகுதிகள் மற்றும் மாணவியர் விடுதிகள் ஆகியன கட்டி முடிக்கப்பட்டு, சீர்மிகு சட்டப்பள்ளி 22.02.2016 முதல் செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் நிர்வாக பணிகள் சார்ந்த அலுவலகங்கள் பூம்பொழில் வளாகத்திலும், கல்வியியல் சார்ந்த பணிகள் பெருங்குடி வளாகத்திலும் தற்போது செயல்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக மானியக்குழுவின் சட்டப்பிரிவுகள் 2(f) மற்றும் 12(B) இன் கீழ் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகம் புதுதில்லியிலுள்ள அகில இந்திய பல்கலைக்கழக கூட்டமைப்பிலும், இந்திய பொது நிர்வாக நிலையத்திலும் தன்னை ஒரு உறுப்பினராகக் கொண்டு திகழ்கிறது. பல்கலைக்கழக மானியக்குழுவின் நோக்கம் மற்றும் கல்விச்சார் திட்டங்களை பின்பற்றி சட்டம் மற்றும் புலமிடை ஆய்வுகளை மேற்கொள்ள இப்பல்கலைக்கழகம் ஊக்குவிக்கிறது.

தமிழ்நாட்டில் சென்னை (பட்டறைபெரும்புதூர் மற்றும் புதுப்பாக்கம்), மதுரை, திருச்சி, கோயமுத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு, வேலூர், விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம், சேலம், நாமக்கல், தேனி, ஆகிய நகரங்களில் அமைந்திருக்கும் பதினான்கு அரசு சட்டக்கல்லூரிகள் மற்றும் தனியார் சட்டக்கல்லூரிகளான சேலத்தில் அமைந்திருக்கும் மத்திய சட்டக்கல்லூரியும் திண்டிவனத்தில் அமைந்திருக்கும் சரஸ்வதி சட்டக்கல்லூரியும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றுள்ளன.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தமிழ்நாடு அரசின் முகவராக இருந்து தமிழ்நாட்டிலுள்ள சட்டக்கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் 3 ஆண்டு எல்எல்.பி. மற்றும் 5 ஆண்டு பி.ஏ.எல்எல்.பி. சட்டப் பட்டப்படிப்புகளுக்கான (முறைசார்) மாணவர்கள் சேர்க்கையினை ஒருங்கிணைந்த ஒற்றைச்சாளர சேர்க்கை முறையில் நடத்திவருகிறது.

## 3 ஆண்டு எல்எல்.பி. பட்டப்படிப்பு

### I. படிப்பிற்கான கால அளவு:

தமிழ்நாட்டிலுள்ள இப்பல்கலைக்கழகத்தின் ஆளுமைக்குட்பட்ட சட்டக்கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் 3 ஆண்டு எல்எல்.பி. சட்டப்படிப்பிற்கான கால அளவு மூன்று முழுமையான கல்வியாண்டுகளாகும். மேற்படி படிப்பின் முதல் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழகத் தேர்வுகள் கல்வியாண்டு முடிவிலும், இரண்டாமாண்டு முதல் இறுதிக்கல்வியாண்டு வரையிலான பல்கலைக்கழகத் தேர்வுகள் பருவமுறைத் தேர்வுகளாகவும் நடைபெறும்.

## II. தமிழகத்திலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளின் விவரங்கள்

### 1. சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைபெரும்புதூர்

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலிருந்து நீதிபதி திரு. பி. சண்முகம் விசாரணை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையிலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பாணைகளுக்கிணங்கவும், 2018-2019-ஆம் கல்வியாண்டு முதல் திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, வரதாபுரம் கிராமத்தில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பட்டறை பெரும்புதூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தாலுகாவில் சுமார் 15 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள புதுப்பாக்கம் ஆகிய வளாகங்களில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறை பெரும்புதூரில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பும் (LL.B) மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பும் (LL.M.) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இக்கல்லூரியில், மொத்தம் 963 மாணவர்கள் இளநிலை சட்டப் படிப்பும் (LL.B), 160 மாணவர்கள் முதுநிலை சட்டமேற்படிப்பும் (LL.M) பயின்று வருகின்றனர். இக்கல்லூாயில், சுமார் 50,000-க்கும் மேற்பட்ட சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள், e-Zone, Digital Library உள்ளடக்கிய நூலகம், சுமார் 1000 பேர் அமரக்கூடிய குளிர்சாதன வசதியுடன் கூடிய மிகப்பெரிய கலையரங்கம் மற்றும் பல்வேறு விளையாட்டுகளுக்கான மைதானங்கள் உள்ளன.

முதலாமாண்டு மாணவர்களுக்கு 321 இடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டு சட்டப்படிப்பில் தமிழ்வழிக்கென தனியே ஒரு பயிற்று வகுப்பு பிரிவு செயல்பட்டு வருகிறது.

மேலும், சுமார் 200 மாணவர்கள் தங்கிப் பயிலுவதற்கேற்ப மாணவர் விடுதியும், சுமார் 200 மாணவிகள் தங்கிப் பயிலுவதற்கேற்ப மாணவியர் விடுதியும் செயல்பட்டு வருகின்றன. விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கை அரசு நிர்ணயித்த இடஒதுக்கீட்டின் அடிப்படையில் நடைபெறும்.

### 2. அரசு சட்டக் கல்லூரி, மதுரை

மதுரை அரசு சட்டக் கல்லூரி 1974-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் மதுரை, தல்லாகுளம், தங்கராஜ் சாலையில் செயல்பட்டு வருகிறது.

மதுரை அரசு சட்டக் கல்லூரியில், 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (LL.B), 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (B.A.LL.B) மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பும் (LL.M) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இக்கல்லூரியில், மொத்தம் 1438 மாணவர்கள் இளநிலை சட்டப் படிப்பு மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பும் பயின்று வருகின்றனர்.

இக்கல்லூரியில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 181 இடங்களும், 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (B.A.LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 171 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப்படிப்புகளில் தமிழ்வழிக்கென தலா ஒரு பயிற்று வகுப்பு பிரிவு செயல்பட்டு வருகிறது.

மதுரை அரசு சட்டக் கல்லூரியின் மாணவர் விடுதி மதுரை, சம்பகுளம், மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் எதிரில் சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு சுமார் 60 மாணவர்கள் தங்கி பயின்று வருகின்றனர். மதுரை அரசு சட்டக் கல்லூரியின் மாணவியர் விடுதி மதுரை, கோரிப்பாளையம், செல்லூரில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு சுமார் 70 மாணவிகள் தங்கி பயின்று வருகின்றனர், மாணவ, மாணவியர் சேர்க்கை அரசு நிர்ணயித்த இடஒதுக்கீட்டின் அடிப்படையில் நடைபெற்றுவருகின்றது.

### 3. அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி 1979-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் திருச்சி, ரேஸ்கோர்ஸ் சாலை, காஜாமலை பகுதியில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு அருகில் செயல்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில், 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (LL.B), 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (B.A.LL.B) மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பு (LL.M) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இக்கல்லூரியில், மொத்தம் 1440 மாணவர்கள் இளநிலை சட்டப் படிப்பு மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பு பயின்று வருகின்றனர்.

இக்கல்லூரியில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 200 இடங்களும், 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (B.A.LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 160 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப்படிப்புகளில் தமிழ்வழிக்கென 60 மாணவர்கள் கொண்ட தலா ஒரு பயிற்று வகுப்பு பிரிவு நடைபெற்று வருகிறது.

திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியின் மாணவியர் விடுதி, அக்கல்லூரி வளாகத்தில் 1065.42 ச.மீ. பரப்பளவில் மூன்று தளங்களில் சுமார் 120 மாணவிகள் தங்கி பயிலும் வகையில் செயல்பட்டு வருகிறது. மாணவியர் சேர்க்கை அரசு நிர்ணயித்த இடஒதுக்கீட்டின் அடிப்படையில் நடைபெற்றுவருகின்றது. தற்போது இக்கல்லூரியில் **மாணவர் விடுதி இல்லை.**

### 4. அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர்

கோயமுத்தூர் அரசு சட்டக் கல்லூரி 1979-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு அருகில், சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் மருதமலை அடிவாரத்தில் செயல்பட்டு வருகிறது.

கோயமுத்தூர் அரசு சட்டக் கல்லூரியில், 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (LL.B), 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (B.A.LL.B) மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பும் (LL.M) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இக்கல்லூரியில், மொத்தம் 1440 மாணவர்கள் இளநிலை சட்டப் படிப்பு மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பு பயின்று வருகின்றன.

இக்கல்லூரியில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 200 இடங்களும், 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (B.A.LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 160 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப்படிப்புகளில் தமிழ்வழிக்கென 60 மாணவர்கள் கொண்ட தலா ஒரு பயிற்று வகுப்பு பிரிவு நடைபெற்று வருகிறது.

கோயமுத்தூர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதி, கல்லூரி வளாகத்திற்குள் 427 ச.மீ. பரப்பளவில் சுமார் 60 மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் செயல்பட்டு வருகிறது. கோயமுத்தூர் அரச சட்டக் கல்லூரி மாணவியர் விடுதி, கல்லூரி வளாகத்திற்குள் 1328 ச.மீ. பரப்பளவில் சுமார் 60 மாணவிகள் தங்கி பயிலும் வகையில் செயல்பட்டு வருகிறது. மாணவ, மாணவியர் சேர்க்கை அரசு நிர்ணயித்த இடஒதுக்கீட்டின் அடிப்படையில் நடைபெறும்.

### 5. அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி

திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி 1996-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் பாளையங்கோட்டையில் மாவட்ட நீதிமன்றம் அருகில் செயல்பட்டு வருகிறது.

திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியில், 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (LL.B.), 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (B.A.LL.B) மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பு (LL.M) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இக்கல்லூரியில், மொத்தம் 1440 மாணவர்கள் இளநிலை சட்டப் படிப்பு மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பு பயின்று வருகின்றனர்.

இக்கல்லூரியில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (LL.B) முதலாமாண்டு மாணவர்கள்கக்கு 200 இடங்களும், 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (B.A.LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 160 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப்படிப்புகளில் தமிழ்வழிக்கென 60 மாணவர்கள் கொண்ட தலா ஒரு பயிற்று வகுப்பு பிரிவு நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி மாணவியர் விடுதி சுமார் 1065.42 ச.மீ. பரப்பளவில் சுமார் 100 மாணவிகள் தங்கிப் பயிலும் வகையில் கல்லூரி வளாகத்தினுள் அமைந்துள்ளது. மாணவர், மாணவியர் சேர்க்கை அரசு நிர்ணயித்த இடஒதுக்கீட்டின் அடிப்படையில் நடைபெறும்.

### 6. அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரியை அரசு சட்டக் கல்லூரியாக அறிவித்து அரசாணை (நிலை) எண். 299, சட்டத் துறை, நாள் 5-12-2006-இல் அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் என்.ஜி.ஜி.ஓ. காலனியில் செயல்பட்டு வருகிறது.

செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில், 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (LL.B), 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (B.A.LL.B) மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பும் (LL.M) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இக்கல்லூரியில், மொத்தம் 1080 மாணவர்கள் இளநிலை சட்டப் படிப்பு மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பு பயின்று வருகின்றனர்.

இக்கல்லூரியில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும், 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (B.A.LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 160 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டு சட்டப்படிப்பில் தமிழ்வழிக்கென 60 மாணவர்கள் கொண்ட ஒரு பயிற்று வகுப்பு பிரிவு நடைபெற்று வருகிறது.

செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவியர் விடுதி சுமார் 861 ச.மீ. பரப்பளவில் சுமார் 43 மாணவிகள் தங்கிப் பயிலும் வகையில் கல்லூரி வளாகத்தினுள் அமைந்துள்ளது. செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதி சுமார் 9275 ச.அ பரப்பளவில் சுமார் 70 மாணவர்கள் தங்கிப் பயிலும் வகையில் கல்லூரி வளாகத்தினுள் அமைந்துள்ளது. மாணவ, மாணவியர் சேர்க்கை அரசு நிர்ணயித்த இடஒதுக்கீட்டின் அடிப்படையில் நடைபெற்றுவருகின்றது.

### 7. அரசு சட்டக் கல்லூரி, வேலூர்

வேலூர் அரசு சட்டக்கல்லூரி, 2008-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு வேலூர் மாவட்டம், காட்பாடியிலுள்ள காந்தி நகரில் 11 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது.

வேலூர் அரசு சட்டக் கல்லூரியில், 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (LL.B), 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (B.A.LL.B) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

இக்கல்லூரியில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும், 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (B.A.LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரி வளாகத்திற்குள் சுமார் 100 மாணவிகள் தங்கிப்பயிலும் வகையில் மாணவியர் விடுதி கட்டப்பட்டு வருகிறது.

### 8. அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம்

விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரி, 2017-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு விழுப்புரம் பேருந்து நிலையம் எதிரில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது.

விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரியில், 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (LL.B.) 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (B.A.LL.B.) மற்றும் முதுநிலை சட்ட மேற்படிப்பும் (LL.M.) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இக்கல்லூரியில், மொத்தம் 600 மாணவர்கள் இளநிலை சட்டப்படிப்பு மற்றும் முதுநிலை சட்டமேற்படிப்பு பயின்று வருகின்றனர்.

இக்கல்லூரிக்கான மாணவர் விடுதி சுமார் 200 மாணவர்கள் தங்கிப்பயிலும் வகையில் விழுப்புரம் வட்டம், வெங்கடேசபுரத்திலும், மாணவியர் விடுதி சுமார் 200 மாணவிகள் தங்கிப் பயிலும் வகையில் விழுப்புரம் வட்டம், பிடாகம் பகுதியிலும் அமைந்துள்ளது. மாணவ, மாணவியர் சேர்க்கை அரசு நிர்ணயித்த இடஒதுக்கீட்டின் அடிப்படையில் நடைபெற்றுவருகின்றது.

### 9. அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி

தருமபுரி அரசு சட்டக் கல்லூரி, 2017-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தருமபுரி நகரில் சி.கே. ஸ்ரீனிவாசராவ் தெருவில் நகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. தருமபுரி அரசு சட்டக் கல்லூரிக்கான நிரந்தரக் கட்டடம் காரிமங்கலம் தாலூகா, பைசுஹள்ளியில் சுமார் 7 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. கல்லூரிக்கான மாணவியர் விடுதி கல்லூரி வளாகத்திற்குள்ளும் மாணவர் விடுதி கல்லூரியிலுருந்து சுமார் 2 கி.மீ. தொலைவிலும் கட்டப்பட்டு வருகிறது. எனவே, வரும் கல்வியாண்டிற்கு மாணவ மாணவியருக்கு **விடுதி வசதி இல்லை.**

தருமபுரி அரசு சட்டக் கல்லூரியில், 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (LL.B), 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (B.A.LL.B) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

இக்கல்லூரியில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும் மற்றும் 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (B.A.LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### 10. அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம்

இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரி, 2017-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இராமநாதபுரம் மாவட்டம், பெருங்குளம் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரிக்கான நிரந்தரக் கட்டடம் மாணவ மாணவியர் விடுதிகளுடன் கட்டுவதற்கு இடம் கண்டறியப்பட்டு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது மாணவ மாணவியருக்கு **விடுதி வசதி இல்லை.**

இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரியில், 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (LL.B), 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (B.A.LL.B) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

இக்கல்லூரியில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும் மற்றும் 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (B.A.LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### 11. அரசு சட்டக் கல்லூரி, சேலம்

சேலம் அரசு சட்டக் கல்லூரி, 2019-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு சேலம் மாவட்டம், மணியனூரில் தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகில் அமைந்துள்ள மாவட்ட கல்வி அலுவலகத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், கடத்தூர் அக்ரஹாரம் கிராமத்தில் 5.99.5 ஹெக்டேர் நிலம் மற்றும் ராக்கிப்பட்டி கிராமத்தில் 1.42.0 ஹெக்டேர் நிலத்தில் சேலம் புதிய அரசு சட்டக் கல்லூரிக்கு மாணவ மாணவியர் விடுதிகளுடன் நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது மாணவ மாணவியருக்கு விடுதி வசதி இல்லை.

சேலம் அரசு சட்டக் கல்லூரியில், 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (LL.B), 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (B.A.LL.B) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

இக்கல்லூரியில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும், 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (B.A.LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### 12. அரசு சட்டக் கல்லூரி, நாமக்கல்

நாமக்கல் அரசு சட்டக் கல்லூரி, 2019-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரில், எண் 12, திருச்சி சாலையில் அமைந்துள்ள டான்சி காட்சியகக் கட்டிடத்தில் (TANSI Showroom Building) தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. நாமக்கல் அரசு சட்டக் கல்லூரிக்கு மாணவ மாணவியர் விடுதிகளுடன் புதிய நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்பொழுது மாணவ மாணவியருக்கு விடுதி வசதி இல்லை.

இக்கல்லூரியில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும், 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (B.A.LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### 13. அரசு சட்டக் கல்லூரி, தேனி

தேனி அரசு சட்டக் கல்லூரி, 2019-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தேனி மாவட்டம், திண்டுக்கல்-குமுளி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஸ்ரீசந்திரகுப்த மௌரியா என்ற தனியார் பள்ளி கட்டிடத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. தேனி மாவட்டம் மற்றும் வட்டம், தப்புக்குண்டு கிராமத்தில் 4.85.5 ஹெக்டேர் நிலத்தில் தேனி அரசு சட்டக் கல்லூரிக்கு மாணவ மாணவியர் விடுதிகளுடன் புதிய நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்பொழுது மாணவ மாணவியருக்கு விடுதி வசதி இல்லை.

தேனி அரசு சட்டக் கல்லூரியில், 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (LL.B), 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு (B.A.LL.B) பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

இக்கல்லூரியில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும், 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பில் (B.A.LL.B) முதலாமாண்டு மாணவர்களுக்கு 80 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 3 ஆண்டு எல்எல்.பி. சட்டப்படிப்பினை பயிற்றுவிக்கும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்ற சட்டக்கல்லூரிகள் மற்றும் அக்கல்லூரிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | இணைவு பெற்ற கல்லூரிகள் | ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் |
|---|---|---|
| 1. | சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, பட்டறை பெரும்புதூர் - 631203. | 321 |
| 2. | அரசு சட்டக் கல்லூரி, மதுரை - 625 020 | 181 |
| 3. | அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 023 | 200 |
| 4. | அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 046 | 200 |
| 5. | அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி - 627 011 | 200 |
| 6. | அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு - 603 001 | 80 |
| 7. | அரசு சட்டக் கல்லூரி, வேலூர் - 623 006 | 80 |
| 8. | அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம் - 605 602 | 80 |
| 9. | அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி - 636 701 | 80 |
| 10. | அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம் - 623 536 | 80 |
| 11. | அரசு சட்டக் கல்லூரி, சேலம் - 636 010 | 80 |
| 12. | அரசு சட்டக் கல்லூரி, நாமக்கல் - 637 001 | 80 |
| 13. | அரசு சட்டக் கல்லூரி, தேனி - 625 534 | 80 |
| 14. | சரஸ்வதி சட்டக் கல்லூரி (தனியார்), திண்டிவனம் - 604 305 | 39* |
| | **மொத்தம்** | **1781** |

(*ஒப்பளிக்கப்பட்ட மொத்த (60) இடங்களில் 65 விழுக்காடு அரசு ஒதுக்கீடாகவும் 35 விழுக்காடு கல்லூரி மேலாண்மை ஒதுக்கீடாகவும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது).

## III. சேர்க்கைக்கான தகுதிகள்:

அகில இந்திய பார் கவுன்சில் வகுத்துள்ள சட்டக்கல்வி சேர்க்கை விதிமுறைகள்-2008 மற்றும் மாநில அரசின் நெறிமுறைகள் ஆகியவற்றை பின்பற்றி இப்பல்கலைக்கழக ஆட்சிமன்றக்குழு ஒப்புதலுடன் சேர்க்கைத் தகுதிகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

(அ) **கல்வித் தகுதி:** பல்கலைக்கழக மானியக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஏதாவதொரு இளநிலை பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்று (மொத்த மதிப்பெண்களில்) **45 விழுக்காட்டிற்கு** குறையாது மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். பட்டியல் பழங்குடியினர் மற்றும் பட்டியல் வகுப்பைச்சார்ந்த விண்ணப்பதாரர்கள் தகுதி தேர்வில் மொத்த மதிப்பெண்களில் **40 விழுக்காட்டிற்கு** குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) **விண்ணப்பம் செய்வதற்கான கட்டாய அடிப்படை தகுதிகள் பின்வருமாறு :**

1. 9 ஆம் வகுப்பு வரை நேரடிப் பள்ளி கல்வி முறையில் பயின்றிருக்க வேண்டும். **மற்றும்**
2. 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு பயின்றிருத்தல் வேண்டும். (நேரடி கல்வி முறையிலோ அல்லது தனித்தேர்வு முறையிலோ பயின்றிருத்தல் வேண்டும்) **மற்றும்**
3. ஏதாவது ஒரு இளநிலை பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். (நேரடி அல்லது அஞ்சல் வழிக் கல்விமுறை அல்லது தொலைதூர கல்வி முறை அல்லது திறந்த நிலை பல்கலைக்கழகங்கள் வாயிலாக பயின்றிருத்தல் வேண்டும்);
4. இளநிலை பட்டப்படிப்பு மட்டுமே தகுதி நிலைக்கும் தரவரிசைப் பட்டியலுக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.;
5. பட்டயப் படிப்பு அல்லது தொழில் கல்வி படிப்பானது உயர்நிலைக் கல்வி (+2) சமமானதாக கருதப்பட மாட்டாது என்பதனை கீழ்காணும் திருப்புகளின் அடிப்படையிலும் மற்றும் இந்திய பார் கவுன்சிலின் சட்டக் கல்வி விதிமுறைகள் 2008 ன் படியும் பின்பற்றப்படுகிறது (W.P. No. 15278 of 2019 dated 24.07.2019, W.P. No. 31161 of 2019 dated 19-08-2020, W.P. No. 31043 of 2017 dated 13.03.2018, W.P. No. 7094 of 2021 dated 17.03.2021, W.P. No. 10684 of 2021 dated 06.07.2021, W.P. No.9961 of 2021 dated 08.07.2021 and W.P. Nos. 2872, 5870 of 2021 dated 01.09.2021).

(இ) **சேர்க்கைக்கான வயது வரம்பு ஏதும் இல்லை.**

(ஈ) **பணியில் இருப்பவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவரல்லர்.**

(உ) தமிழ்நாடு அரசின் ஆணைப்படி **திருநங்கையர்/அரவாணி** விண்ணப்பதாரர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக கருதப்படுவர். அவர்கள் இணையவழி விண்ணப்பப் படிவத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினர் என்று தேர்வு செய்யுமாறு கோரப்படுகின்றனர்.

**குறிப்பு:** (1) விண்ணப்பதாரர்கள் ஒதுக்கப்பட்ட கலந்தாய்வு அமர்வு நாளன்று தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்று பட்டச் சான்றிதழ் / தற்காலிகத் தேர்வுச் சான்றிதழ் (Degree / Provisional) பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அவர்களது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும் அவர்கள் கலந்தாய்வில் பங்குபெற தகுதியற்றவர் ஆவர்.

(2) விண்ணப்பதாரர்கள் தாங்கள் படித்த பல்கலைக்கழகத்திலிருந்தோ அல்லது கல்லூரி அல்லது கல்வி நிறுவனத்திலிருந்தோ தங்களின் தகுதி பட்டப்படிப்பில் பெற்ற தொகுப்பு மதிப்பெண் பட்டியலின் (Consolidated Mark Statement) ஒளிம நகல் ஒன்றை பெற்று விண்ணப்பத்துடன் கட்டாயமாக இணைத்தல் வேண்டும்.

## IV. தெரிவு செய்யும் முறை:

(i) விண்ணப்பதாரர்கள் தகுதித்தேர்வில் பெற்றுள்ள மதிப்பெண்கள் அடிப்படையிலும் மற்றும் இனவாரியான இடஒதுக்கீடு மற்றும் சிறப்பு இடஒதுக்கீடுகளின் அடிப்படையிலும் வரிசைப்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

(ii) மூன்றாண்டு சட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தாரர்களின் தகுதித் தேர்வின் முக்கிய மற்றும் துணைப்பாடங்களில் பெற்றுள்ள ஒட்டுமொத்த மதிப்பெண்களின் சதவிகித அடிப்படையில் கணக்கிடப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள். மொழிப் பாடங்களையே முக்கிய தகுதித் தேர்வின் பாடங்களாக (இளங்கலை - தமிழ் இலக்கியம், இளங்கலை ஆங்கில இலக்கியம் போன்ற மொழி சார்ந்த படிப்புகள்) கொண்டிருந்தால், அத்தகுதித் தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்களின் சதவிகித அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். இந்த விதியானது (அரசாணை நிலை எண்:83, சட்ட(சக)துறை, நாள் 19.04.2007). அடிப்படையில் பின்பற்றப்படுகிறது.

**குறிப்பு:** தொகுப்பு மதிப்பெண் பட்டடியலின் **(Consolidated Mark Statement)** ஒளிம நகலினை மாணவர்கள் விண்ணப்பத்துடன் கட்டாயமாக இணைக்கப்பட வேண்டும். பட்டப்படிப்பு மதிப்பெண் பட்டியலில் படிநிலை மதிப்பெண்கள் (Grade Points) குறிப்பிடப்பட்டிருந்தால் விண்ணப்பதாரா் பகுதி-III பாடங்களில் (Part-III – Major and Allied Papers only) தான் பெற்ற துல்லிய மதிப்பெண்களை தொடா்புடைய இணைப்பு படிவம் XI-ல் சமா்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சரியான மதிப்பெண் பட்டியல் சமா்ப்பிக்கப்படவில்லையெனில், அவ்விண்ணப்பதாரா் பெற்றுள்ள படிநிலைக்குரிய குறும அளவு மதிப்பெண்ணை மட்டுமே கருத்தில்கொண்டு தரவரிசைப்படுத்தப்படுவா்.

**தளை மதிப்பெண்களை முடிவு செய்தல்:**

3 ஆண்டு சட்டப்படிப்பிற்கு விண்ணப்பம் செய்திருக்கும் விண்ணப்பதாரர்கள் தளை மதிப்பெண்கள் (அதாவது ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பதாரா்கள் சமமான மதிப்பெண்கள்) பெற்றிருப்பின் பின்வரும் வரிசைப்படி அவ்விண்ணப்பதாரா்களின் தரவரிசைப்பட்டியல் தீா்வு செய்யப்படும். (அரசாணை நிலை எண்.83, சட்ட (சக)த் துறை, நாள் 19.04.2007).

அ. பிறந்த நாள் (மூத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்)
ஆ. குலுக்கல் முறை

**குறிப்பு:** மாணவா் சோ்க்கையில் எவ்விதமான வேண்டுகையும் அனுமதிக்கப்படமாட்டாது. மாணவா் சோ்க்கை தொடா்பாகதங்களது செல்வாக்கினை பல்கலைக்கழக பேராசிரியா்கள் அல்லது மாணவா் சோ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பேராசிரியா்கள் அல்லது பல்கலைக்கழக அலுவலா்களிடம் பயன்படுத்த முறப்பட்டால் அந்நபா் சோ்க்கைக்கான தகுதியை இழப்பாா்.

**இணையவழ விண்ணப்பத்தின் மீது குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண் சட்டக்கல்வி சேர்க்கை 2021-22-க்கான பதிவு எண்ணாக கருதப்படும். விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படும் அனைத்து இணைப்புகளிலும் வலது பக்க மேல் மூலையில் விண்ணப்ப எண்ணை குறிப்பிடுதல் வேண்டும் மற்றும் சேர்க்கைத் தொடர்புடைய அனைத்து தகவல் கடிதங்களிலும் பதிவு எண்ணை அவசியம் குறிப்பிடுதல் வேண்டும்.**

## V. இனசுழற்சி அடிப்படையில் இடஒதுக்கீடு:

விண்ணப்பதாரா்களை தெரிவு செய்ய அவ்வப்பொழுது தமிழக அரசால் தீா்மானிக்கப்படும் வகுப்புவாரிஅடிப்படை மற்றும் சிறப்பு இடஒதுக்கீட்டு விதிகள் பின்பற்றப்படும். (சாதிப்பட்டியல் மற்றும் அதன் குறியீடுகளுக்கு இணைப்பு I-யையும் சிறப்பு இடஒதுக்கீடு மற்றும் அதன் குறியீடுகளுக்கு இணைப்பு II-யையும் காண்க). தமிழக அரசால் தீா்மானிக்கப்பட்டுள்ள வகுப்புவாரியான இடஒதுக்கீடு முறையை கீழ்க்காணும் வகையில் பின்பற்றி சோ்க்கைக்கான தெரிவு நடைபெறும்.

| இட ஒதுக்கீடு | |
|---|---|
| பொதுப் பிரிவினா் – (OC) | 31% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினா் (மற்றவா்) – BC(O) | 26.5% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினா் (முஸ்லீம்) – BC(M) | 3.5% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினா் (வ) – MBC(V) | 10.5%** |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினா் மற்றும் சீா்மரபினா் – (MBC/DNC) | 7% ** |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினா் – MBC | 2.5% ** |
| பட்டியல் சாதியினா் வகுப்பினா் (மற்றவா்) – SC(O) | 15% * |
| பட்டியல் சாதியினா் வகுப்பினா் (அருந்ததியினா்) – SC(A) | 3% * |
| பட்டியல் இனத்தவர் வகுப்பினா் – (ST) | 1% |

***அரசாணை நிலை எண்.50, பட்டியல் சாதியினா் மற்றும் பட்டியல் இனத்தவர் நலத்துறை(TD2) நாள் 29-04-2009.**
**** அரசாணை நிலை எண்.75, மனித வள மேலாண்மைத் (K) துறை நாள் 26-07-2021.**

**குறிப்பு:** தமிழ்நாட்டை இருப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரா்களுக்கு மட்டுமே மேற்படி இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்படும். தமிழ்நாட்டை தவிர **மற்ற மாநிலங்களில்** இருந்து பெறப்பட்ட சாதி சான்றிதழ்கள் இட ஒதுக்கீட்டிற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அவா்கள் **பொதுப்பிரிவின்** கீழ் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

**சாதிச் சான்றிதழ்:**

வகுப்புவாரி அடிப்படையில் இட ஒதுக்கீடு கோரும் விண்ணப்பதாரா்கள் தங்களது சேர்க்கை விண்ணப்பத்துடன் தமிழகத்தில் உரிய அலுவலரால் வழங்கப்பட்ட நிலையான சாதிச்சான்றிதழ் அட்டையின் நகலினை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

வருவாய்த்துறையினரால் 02.05.1988-ம் நாளன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை நிலை எண் 781-ன் படி வழங்கப்பட்ட அசல் சாதிச்சான்றிதழை, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரா்கள் சரிபாா்ப்பதற்காக கலந்தாய்வு அமா்வின் போது சமா்ப்பித்தல் வேண்டும்.

**கொண்டாரெட்டி சாதியைச் சார்ந்த விணணப்பதாரர்கள் சொந்த மாவட்டத்தைச் சார்ந்த வருவாய் கோட்டாட்சியரால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.**

(அரசுச் செயலாளர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத் துறை, சென்னை-600009, அவர்களின் 27.12.1989 நாளிட்ட கடித எண்: 32061/ஆதி(ந)/89-2 மற்றும் 15.11.1994 நாளிட்ட கடித எண்:21424/ஆதிநII/94-4- இன்படி), பட்டியல் இனத்தவர் வகுப்பினரைப் பொறுத்தவரை, சாதிச் சான்றிதழ் வருவாய் கோட்டாட்சியரால்/சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக (பொது) உதவியாளரால்/ சம்பந்தப்பட்ட மாவட்ட (சென்னை மாவட்டத்தைத் தவிர) சார்பு மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

துளுவ நாயக்கர், தொக்களவர், சில்லவர், கொல்லவர், ராஜகம்பளம் உள்ளிட்ட தொட்டிய நாயக்கரைப் பொறுத்தவரை, அரசாணை நிலை எண்.26, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத்துறை, நாள் 07.06.1996-இன் படி சாதிச் சான்றிதழ்கள் தலைமையிடத்து துணை வட்டாட்சியர்களால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த விண்ணப்பதாரர்கள் அவர்களது குடும்பம் முன்னரே தமிழகத்தின் ஏதாவதொரு மாவட்டத்தில் இருந்து மற்றொரு மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்து இருப்பின் அவர்கள் தற்போது வசிக்கும் இருப்பிடத்தைச் சார்ந்த மாவட்டத்தில் உள்ள உரிய அரசு அலுவலரால் வழங்கப்பட்ட சாதி சான்றிதழினை தமிழக அரசின் அரசாணை நிலை எண்: 95, பிப, மிபிப/ சீம நலத்துறை நாள்: 28.10.2009 ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெற்று சமர்ப்பிக்கலாம்.

வகுப்புவாரி அடிப்படையில் இட ஒதுக்கீடு கோரும் விண்ணப்பதாரர்கள் கட்டாயமாக அவர் சார்ந்த சாதிச் சான்றிதழின் (சுயசான்றொப்பமிடப்பட்ட) ஒளிம நகலினை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பவேண்டும். அவ்வாறு **சாதி சான்றிதழின் நகலினை சமர்ப்பிக்க தவறிய விண்ணப்பதாரர்களது விண்ணப்பங்கள் பொதுப் பிரிவின் கீழ் மட்டுமே பரிசீலிக்கப்படும்**. அவ்வாறு பொதுப் பிரிவின் கீழ் பரிசீலிக்கப்படும் நேர்வில் அவர்கள் பொது பிரிவினருக்கான சேர்க்கை தகுதிகள் அடிப்படையில் பரிசீலிக்கப்படுவர். அவ்வாறு பொது பிரிவின் கீழ் உரிய தகுதிகளைப் பெறாமல் இருப்பின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இது குறித்து எந்தவொரு தகவல்களும் பரிசீலிக்கப்படமாட்டாது.

ST/SC(A)/SC(O)/MBC(V)/MBC/DNC/MBC/BC(M)/BC(O) இனத்தை சாந்த விண்ணப்பதாரர்கள் வகுப்புவாரி ஒதுக்கீடு தவிர பொது பிரிவின்கீழ் தெரிவு செய்யப்படும் தெரிவிற்கும் தகுதியுடையவர்கள் ஆவர்.

தமிழக அரசினால் விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாதியானது இத்தகவல் குறிப்பேட்டின் அட்டவணை 1-ல் குறிப்பிட்டுள்ள சாதிகளில் ஏதாவது ஒன்றில் அடங்கவேண்டும்.

## VI. சிறப்பு இட ஒதுக்கீடு:

சிறப்பு இட ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கீடு கோரவிரும்பும் விண்ணப்பதாரர்களுக்கான நெறிமுறைகள்:

**Reservation for Special Category**

| CODE NO. | CATEGORY | RESERVATION |
|---|---|---|
| 01. | Children of Ex-Servicemen | 1% |
| 02. | Children of Freedom Fighter | 1% |
| 03. | ***Persons with Disabilities** | 5% (each 1%) |
| | a. Blindness and Low Vision | 1% |
| | b. Deaf and Hard Hearing | 1% |
| | c. Locomotor Disability including Cerebral Palsy, Leprosy Cured, Dwarfism, Acid Attack Victims and Muscular Dystrophy * | 1% |
| | d. Autism, Intellectual Disability, Specific Learning Disability and Mental Illness * | 1% |
| | e. Multiple Disabilities from amongst Persons under clauses (a) to (d) including Deaf-Blindness in the programme identified for each Disabilities * | 1% |
| 04. | Eminent Sportsperson | 10 Seats |

[G.O.Ms.No.251, Law (LS) Department, dated 04-07-2003]. *(G.O.(Ms) No.121HE (J1) Department dt:03.07.2012

சிறப்பு இட ஒதுக்கீட்டில் மாற்றுத்திறனாளிகள் பிரிவில் இட ஒதுக்கீடு கோருவோர் தாங்கள் **40 விழுக்காடு** மற்றும் அதற்கு மேலாக ஊனமுற்றவர் என்பதற்கான அவர்கள் சார்ந்துள்ள மாவட்ட அரசு மருத்துவக்குழுவினரால் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழினை பெற்று சமர்ப்பிக்க வேண்டும். தனி மருத்துவ அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள் ஏற்கப்படமாட்டாது.

## VII. மற்ற மாநில விண்ணப்பதாரர்கள்:

தமிழகத்தை தவிர மற்ற மாநிலங்களை சார்ந்த விண்ணப்பதாரர்கள் **பொதுப்பிரிவின்** கீழ் மட்டுமே சேர்க்கைக்கு பரிசீலிக்கப்படுவர்.

## VIII. தரவரிசைப்பட்டியல் வெளியிடுதல்:

விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களது **தரவரிசைப்பட்டியல் (Rank list)** சம்பந்தப்பட்ட சட்டக்கல்லூரிகள் மற்றும் சட்டப் பல்கலைக்கழகத்தின் அறிவிப்பு பலகைகளில் தகவலுக்காக, (நாளிதழ்களில் உரிய அறிவிப்பு செய்த பின்பு) ஒட்டப்படும். மேலும் தரவரிசைப்பட்டியலானது இப்பல்கலைக்கழக இணையதளம் www.tndalu.ac.in முகவரியிலும் வெளியிடப்படும்.

## IX. கலந்தாய்வு, ஒதுக்கீடு மற்றும் சேர்க்கை:

### (1) கலந்தாய்வு:

தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு சட்டப்படிப்பு **கலந்தாய்வு அமர்வுகள் இணையதளம் வாயிலாக மட்டுமே** நடத்தப்படும். கலந்தாய்வு குறித்த தகவல்கள் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மின்னஞ்சல் வாயிலாகவும் குறுஞ்செய்தி வாயிலாகவும் தெரிவிக்கப்படும்.

- மூன்றாண்டு சட்டப்படிப்பில் சேரவிரும்பும் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று முறையே மதிப்பெண் சான்றிதழ்கள் பெற்றிருந்து அதனுடன் உரிய அசல் சான்றிதழ்களை (பட்டச்சான்றிதழ் அல்லது தற்காலிக சான்றிதழ், சாதி சான்றிதழ், மாற்றுச்சான்றிதழ், நன்னடத்தைச் சான்றிதழ், சிறப்பு இடஒதுக்கீடு பெறுவதற்குரிய சான்றிதழ்) சமர்ப்பித்தால் மட்டுமே கலந்தாய்வு அமர்விற்கு அனுமதிக்கப்படுவர்.

- தேவையான அசல் சான்றிதழ்களின் கதிர்ப்படிமப் பிரதியினை (Scanned copy) சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்கள் கலந்தாய்வில் பங்கேற்க அனுமதிக்கப்படாததோடு சேர்க்கைக்கான உரிமையையும் இழப்பர்.

### (2) ஒதுக்கீடு:

- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கலந்தாய்வு அமர்வில் கல்லூரி சேர்க்கைக்கான இடஒதுக்கீடு செய்யப்படும்.

